தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பெயரில் தம்மை வளர்க்கும் புலத்து "கலைஞர்கள்"

அண்மையில் டென்மார்க்கில் தயாரிக்கப் பட்டதாக கூறப்பட்ட ஒரு திரைபடத்தின் இறுவட்டு வெளியீட்டு விழா இந்தியாவில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் திரைப்படத்தை தயாரித்த கி.செ.துரை என்பவருக்கு டென்மார்க் கில் இருந்து இந்தியா சென்ற இராஜலிங்கம் என்பவர் டென்மார்க் தமிழ் மக்கள் சார்பாக மாலை அணிவித்து பாராட்டியதாக கி.செ.துரை யின் இணையத்தில் துரையால் எழுதப் பட்டிருந்தது. ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களையும் ஒருவர் பிரதிநிதித்துவப் படுத்துவது என்பது இந்த செல்லத்துரை போன்ற புலத்துப் பன்னாடைக் கலைஞர் கள் பார்வையில் மிகவும் மலிவான விடயமா கியுள்ளது.

அண்மையில் டென்மார்க் தமிழ் சமூகத்தின் சார்பில் என்று தன்னைக் கூறிக்கொண்டு குமாரதுரை என்பவர் சிங்கள அரசின் பணத்தில் சிறிலங்கா சென்று வந்ததை கொழும்பு நாளேடுகள் பதிவாக்கியிருந்தமையும் நாம் காணக்கூடியதாக இருந்தது.

இந்தியாவில் நடைபெற்ற இறுவட்டு விழா வில் திரைப்படத்தை தயாரித்த கி.செ. துரை உரையாற்றும் பொழுது தமிழீழ விடுதலைப் போருக்கு தமிழ் சினிமாவே காரணம் எனக் கூறியிருந்தமை பல இணையத்தளங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டு கணடனத்திற் குள்ளானது. சாந்தி ரமேஸ் தனது கண்டனக் கருத்தை ஒரு பேப்பர் பத்திரிகையிலும் யாழ் இணையத்திலும் பதிவு செய்திருந்தார். துரையின் பொய்யான கருத்தையும் புழுகை யும் சாந்தி ரமேஷ் விமர்சனத்துக்கு உள்ளாக்கி யிருந்தார். கி.செ.துரையின் கூற்று தமிழீழ விடுதலையை மட்டும் தம்முள்ளத்தில் சுமந்து எமது மண்ணுக்காக வித்தான மாவீரர்களை கொச்சைபடுத்துவதினை மிகவும் கடுமையாக சுட்டியிருந்தார்.

ஆனால் சாந்தி ரமேசின் ஆக்கத்திற்க்கு ஒருபேப்பரிலேயே மாற்று அறிக்கையை பதிவு செய்த பாவலர் வல்வைத் தேவன் என்பவர் நிகழ்வின் முழுமையான ஒளிநாடாவை பார்க் காமல் சாந்தி ரமேஸ் தனது காழ்ப்புணர்ச்சியை கொட்டியிருக்கிறார் என விமர்சித்துள்ளார். அத்துடன் தனது விமர்சனத்தில் பதிவு செய்தது போன்று கி.செ.துரை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களவர் காரணம் இல்லை என கூறவில்லை சிங்கள அரசு என்றே குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் சினிமா கி.செ.துரையை வளர்த்திருந் தால் அது அவருடைய பிரச்சனை ஆன ால் தமிழரது போராட்டம் சிங்கள அரசின் கொடுமைகளால் உருவாக்கப்பட்டது அதைத் தான் தலைவர் அவர்கள் குறிப்பிடும் பொழுது வன்முறையை நாம் விரும்பித் தெரிவு செய்யவில்லை எம்மீது அது திணிக்கப் பட்டுள்ளது எனவும் மற்றும் ஜெயவர்த்தனா ஒரு உண்மையான புத்தமதத்தவராக இருந் திருந்தால் தான் ஆயுதம் தூக்க வேண்டி வந்திருக்காது எனவும் கூறியிருக்கின்றார். எமது வாதங்களுக்கு தலைவரை இழுக்க விரும்பாத நிலையிலும் வல்வை தேவன் தலை வரின் கூற்றை தமக்கு சாதகமாக பாவிக்க முயன்றதால் எடுக்க வேண்டியுள்ளது. எமது போராட்டத்திற்கு சினிமா உந்து சக்தியான இருக்கலாம் ஆனால் காரணமாக இருக்க வில்லை. நிகழ்வின் ஒளி நாடாவை பார்க்காதது வல்லை தேவன் தான்.

நன்றி.

- டென்மார்க்கிலிருந்து வாசன்

என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?

சில வாரங்களுக்கு முன்பு ஒரு பேப்பர் ஏந்தி வந்த 'இராணியக்காவின் கதை' வார்த்தை களில் வடிக்கவொண்ணா வேதனையை அளித்தது. இவரைப் போல எத்தனை பெண்கள், தாய்மார்கள் குழந்தைகள் இந்நிலைக்கு ஆளாக்கப் பட்டுவிட்டனர். இன்னமும் அதே நிலை நீடிக்கிறதே...! பாவிகள், இவர்கள் எல்லாம் பரம்பரையே அற்று அழிந்து போவார்கள்.

இதுவரை இழந்தவை எத்தனை? எத்தனை? எண்ணில் அடங்குமா? குழந்தைகள் குஞ்சும் பிஞ்சுமாக இளைஞர் யுவதிகள், பெரியோர் (அறிஞர்), முதியோர் எத்தனை ஆயிரம்பேரை நாம் இழந்தோம்.

வீடுகள், கட்டிடங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள், நூலகங்கள் என எத்தனை சொத்துக்களை நாம் இழந்தோம். ஏத்தனையோ தலைமுறையாகப் பேணிக் காத்த நினைவுச்சின்னங்கள், பொருள் பண்டங் கள். எல்லாம் கடின உழைப்பின் வடிவங்கள்.

தாய் மண்ணுக்காகப் போராடி வாழ்வைத் தியாகம் செய்த வரலாறு காணாத போர்வீரர் கள், வீராங்கனைகள். இவ்வளவு இழந்தும் இன்னும் ஏன் எமக்கு விடுதலை கிட்டவில்லை? ஏங்குகிறது இதயம்.

எழுத்தில் அடங்காச் சாகசங்களை எமது வீரர் புரிந்தார்களே! ஏன் இன்னும் எம் தமிழீழம் கைக்கெட்டவில்லை? தர்மம் எப்போது வெல்லும் என்று ஏங்கித் தவிக்குது மனம். இந்த நியாயமான அறப்போராட்டத்தில் வெற்றி காண்பது எப்போது? இந்த அறப் போராட்டத்திற்கு இடையூறாக இருக்கும் கருணா போன்ற பாவிகள் இன்னும் அழியா திருப்பது ஏன்?

ஈழத் தமிழர்கள் யாவரும் மன ஒருமைப் பாட்டுடன் அல்லும் பகலும் எமது தாயகத் திற்கு விடுதலை கிட்டவேண்டும் என்று ஏங்கு வோமாக, செயற்படுவோமாக, காந்தியின் அத்ம பலம் இந்தியாவிற்கு விடுதலையைத் தந்ததுபோல எமது ஆத்ம பலம் எமது மண்ணை மீட்டுத் தரும். எம் தன்னிகரற்ற தேசியத் தலைவன் வேலுப்பிள்ளை பிரபா கரன் தளர்வின்றி வீர தீரத்துடன் என்றும் விளங்குவாராக. கற்பனைக்கு எட்டாத அற்புத மாக வசித்தவர் எம் தலைவர் என்பதை யாரால் மறுக்க முடியும்.

- முத்து

கானமூர்த்தி காலமானர்

ஈழத்தின் பிரபலமிக்க நாதஸ்வரக் கலைஞர் கோண்டாவில் வி.கே. கானமூர்த்தி இம்மாதம் 10ம் திகதி காலாமானர். தனது பதினைந்து வயதிலிருந்து நாயனம் வாசிக்க ஆரம்பித்த கானமூர்த்தி 35 ஆணடுகளுக்கு மேலாக பல கச்சேரிகளை நடாத்தி இரசிகர்களை கவர்ந்தவர். அவர் நினைவாக இச்சிறு குறிப் பினை பதிவு செய்துள்ளோம்.

- ஒரு பேப்பர்

இதை வெறும் செய்தியாக என்னால் பார்க்க முடியவில்லை. நாம் எமது கலை பண்பாட்டுச் சொத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து போகிறோமோ என்ற வெப்பியாரமே என்னுள் எழுகிறது.

எமது பண்பாட்டுச் சொத்து என்று இப்போதும் நாம் கட்டிக் காப்பதில் கோயிலுக்கு தனியான இடம் உண்டு. கோயில் என்றவுடன் மணியோசை என்பதிலும் பார்க்க தவில், நாயன ஓசை உடன் ஞாபகத்திற்கு வரும். அவ்வளவு தவில் நாயனம் என்பன நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. யாவற்றையும் இழக்கப்போகிறோமோ என்ற ஏக்கம்தான் இப்போது மிஞ்சுகிறது.

யாழ் குடாநாடெங்கும் தவில் நாயன மழை பொழியாத கோயில்களோ, திரு விழாக்களோ கிடையாது. தவில் என்றவுடன் நம் ஞாபகத்திற்கு வருவோர் அளவெட்டி தட்சிணாமூரத்தி, இணுவில் சின்னராசா, கைதடி பழனி, நாச்சிமார் கோயிலடி கணேசு, இணுவில் புண்ணியமூரத்தி, அளவெட்டி குமரகுரு அளவெட்டி உதயசங்கர் இன்னும் சிலர்.

நாயனம் என்றால் சாவகச்சேரி பஞ்சாபி கேசன், அளவெட்டி பத்மநாதன். நாச்சிமார் கோயிலடி ஆறுமுகம்பிள்ளை, அளவெட்டி பாலகிருஸ்ணன், கோண்டாவில் பாலகிருஸ் ணன், அளவெட்டி சிதம்பரநாதன் போன்ற இன்னும் சிலரைக் குறிப்பிடலாம்.

இவர்களில் நான் குறிப்பிடாத ஒருவர் அல்லது இருவர் கோண்டாவில் கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி ஆகியோரையே. குடாநாட்டில் நாயனத்தால் இரசிகர்களை ஒரு கலக்கு கலக்கியவர்கள் என்றால் அது கானமூர்த்தி பஞ்சமூர்த்தி இருவரையே சாரும் மிக்க ஜனரஞ்சகமான நாயனக்காரர் என்று இந்த இருவரையும் குறிப்பிடலாம். ஜன ரஞ்சகம் என்பது எல்லோராலும் இயலாத ஒன்று. கர்நாடக சங்கீதம் குறித்து எதுவும் தெரியாதவர்களும் கானமூர்த்தியின் நாயன வாசிப்பின் ஊடாக கவரப் பெறுவார்கள். மேடையில் இவர்கள் இருவரும் இருந்து வாசிக்கும் அழகு யாவரையும் மயக்கி விடும். அதிகமான இரசிகர்களை ஈர்த்துக் கொண்டவர்கள் இவர்கள்.

காலம் கண்வைத்ததோ கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி என்ற இருவரும் பிரிந்தனர். தனித்தனியே 'சேவுகம்' செய்தனர். அதனால் உயிர்ப்பு கொஞ்சம் குறைந்தது. இது கண்டு வெம்பிய இரசிகர்கள் இருவரும் மீண்டும் இணைவார்கள் என்று நம்பினர். அது கைகூடா மல் காலம் கைவிரித்தது இப்போது கானமூர்த்தி காலமானார் என்ற செய்தியை மிக்க துக்கத்து டன் உணர நேர்ந்தது ஒரு மகா துயர். அன்னாருக்கு அதுவே நாம் தரத்தக்க அஞ்சலிக் குறிப்பு.

- அ.இரவி

Voice your Opinion!

1. On 7th Sept Fareed Zakaria's "GPS" on CNN had a show and at the end of the show, he announced his question of the week: "What ethnic group in the world do you believe has the strongest case to become a nation?"

Please show your support for a separate country for Tamils, but everyone should write in their own words so it doesn't look like an orchestrated campaign.

Please e-mail him at: FareedZakariaGPS@cnn.com

2. A BBC link is given below. We should take this opportunity to let BBC know what we think about the British Media and the other sectors of the International Community.

http://news.bbc.co.uk/2/hi/talking_point/7591834.stm

The following text is taken from their web site. If you are in a position to voice your opinion, please go to the above link and give your comment.

"Are you a Somali, Tamil or Kurd in the UK? The BBC news website would like to hear from Somalis, Kurds and Sri Lankan Tamils living in the UK.

We want to look at how these communities keep their political aspirations and cultural traditions alive - and their relationship with their troubled homelands.

Are you a Somali, Sri Lankan Tamil or Kurd living in the UK? How long have you lived here and under what circumstances did you first come to the UK? How do you keep in touch with your country of origin?

You can share your experiences using the form below.

Comments will not be published but you may be contacted by the BBC."

அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?

நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?

"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

020 8444 6655.

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

"யாமிருக்கப் பயம் ஏன்?"

அழையுங்கள்:

தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்

0208 444 6655

தமிழர் அறங்காவற் கட்டளை
(இலக்கம்: 1117267)

tamil community
"building a better community"
CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org